TAMIL MURASU, FRIDAY, 17 DECEMBER 2021, PAGE 2

# என்டியுவின் புதிய பள்ளி

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், வேதியியல், ரசாயனப் பொறியியல், உயிர்தொழில்நுட்பப் பள்ளியை புதிதாக திறக்கிறது. அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து இப்பள்ளியில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். பொறியியல், அறிவியல் கல்லூரிகளின் கூட்டு முயற்சியில் பல பிரிவுகள் இணைக்கப்பட்டு புதிய பள்ளி தொடங்கப்பட்டுள்ளது.

'என்டியு 2025' எனும் உத்திபூர்வ திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை இடம்பெறுவதாக என்டியு தெரிவித்தது.